(இ) சாத்தியமான இடங்களில் லோடு டெஸ்டு (Load Test) நடந்துவிட்டது. இந்த இடங்களில் இப்போது காண்டூர் சர்வே (Contour Survey) நடந்து வருகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், நீண்டகாலமாகச் சேலத்து உருக்காலையைப்பற்றிப் பேசி வந்தாலும் மறுபடியும், மறுபடியும் டெல்லியில் இருந்து வரும் அறிக்கைகள் இதற்குச் சாதகமாக இல்லாமல் இருப்பது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பத்திரிகைகளில் இப்படி மாறி மாறிச் செய்திகள் கொடுத்தால்தான் பத்திரிகைகள் விற்கும். ஆகையால், பத்திரிகைச் செய்திகளைப் பற்றி அதிகக் கவனம் செலுத்த வேண்டியதில்லை. நான் இந்தச் சட்டசபையில் கொடுக்கிற தகவல்களை மட்டும் திட்டவட்டமாக எடுத்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : சேலம் உருக்காலையில் இருந்து 3 லட்சம் டன் இரும்பு கிடைக்கும் என்றும் அது 6 கோடி ரூபாய் மதிப்புடையதாக இருக்குமென்றும், இந்த இரும்பை வெட்டி எடுக்க நெய்வேலி மின் நிலையத்தில் இருந்து 400 மெகவாட் மின் சக்தி கொடுக்கவேண்டுமென்றும், அந்த 400 மெகவாட் மின் சக்திக்கு ரூபாய் 12 கோடியாகும் என்றும் கருத்துக்கள் டெல்லியில் இருந்து வருகின்றன. அதுபற்றி கனம் அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டெல்லி கருத்துக்கள் என்று பத்திரிகையில் வரும் செய்திகளை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சொன்னேன். மேலும், அந்த டெல்லிக் கருத்துக்கள் என்று கனம் அங்கத்தினர் கொடுத்த புள்ளிவிவரங்கள் எல்லாம் தவறு.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சேலம் இரும்புத் தொழிற்சாலை என்ற பெயரே நடமாடி வருவதால் சேலத்திலேயே இந்த இரும்புத் தொழிற்சாலையை நிறுவ அரசாங்கம் முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிபுணர்கள் எங்கு அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்களோ அங்குதான் அமையும்.

மதுரை நகரசபை.

* 103 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரசபையில் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நகரசபை சொத்து மோசடியாகி இருப்பது உண்மையா ?

(இ) ஆமென்றால், எவ்வளவு ?

[12th August 1963

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) மோசடியாகியுள்ள சொத்தின் மதிப்பு ரூபாய் 4,567-34.

(a) Yes.

(b) The total value of the materials involved will amount to Rs. 4,567.34 nP.

திரு. கரு. சீமைச்சாமி : சார், இந்த மோசடி மதுரை நகர சபை கமிஷனருடைய கவனக் குறைவால் ஏற்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது அவருடைய கவனக் குறைவால் ஏற்பட்டது என்று இப்போது ஒன்றும் முடிவு செய்ய முடியாது. அந்த விவரம் போலீஸ் விசாரணையில் இருந்து வருகிறது.

திரு. நா. ராஜாங்கம் : மோசடி சம்பந்தப்பட்ட வரையில் பொதுமக்களுடைய பிரதிநிதிகளும் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அப்படி என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை.

திரு. எஸ். மாதவன் : இந்த நகரசபையில் தமிழ் தெரியாத வடநாட்டுக்காரர் கமிஷனராக இருப்பதனால்தான் இந்த மோசடி நடைபெற்றதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் அந்தக் கமிஷனருடன் தமிழில் பேசி வழக்கம் இல்லையென்று அறிகிறேன்.

திரு. எம். எஸ். மணி : மோசடி செய்தவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : போலீஸ் விசாரணையில் அது இருக்கிறது. அந்த விசாரணை முடிந்த பின்புதான் அவர்களுடைய அறிக்கையின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இது போன்ற மோசடிகள் மற்ற முனிசிபாலிட்டியில் நடந்திருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அப்படி ஒன்றும் தகவல் இல்லை,

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தக் கேள்வியில் "சொத்து" என்று இருக்கிறதே, என்ன, என்ன பொருள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நகரசபைக்குரிய தகடுகள், குழாய்கள் முதலியன.

12th August 1963]

திரு. வை. சங்கரன் : இதில் மோசடி செய்தவர் இம்மாதிரி பல தடவை வேறு இடங்களிலும் குற்றம் செய்திருக்கிற எக்ஸ்-கான்விக்ட் இல்லையா ? இது விஷயமாக கமிஷனர் பேரில் குற்றம் சொல்ல முடியாது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது சம்பந்தப்பட்டவர் ஏற்கன வேயே பல தடவை இம்மாதிரி தவறு இழைத்தவர் தான். கமிஷனர் அவர்களுக்கு கலெக்டர் பி.ஏ. யிடமிருந்து டெலிபோன் வந்தது என்ற அளவில் இவ்விஷயத்தில் உதவி செய்யவேண்டு மென்ற நோக்கம் கமிஷனருக்கு ஏற்பட்டிருக்கலாம். இப்போது போலீஸ் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. இது முடிந்த பிறகு இதுபற்றி ஆலோசனை செய்து தீவிரமாக நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்படும்.

திரு. எஸ். மாதவன் : இந்த மோசடியில் கமிஷனர் கலந்து கொண்டிருக்கிருர்கள் என்று நகரசபை கருத்து தெரிவித்திருக் கிறதா ? அப்படியானல் கமிஷனரை மாற்றுவார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அப்படி ஒன்றும் தெரியவில்லை. கமிஷனர்தான் இதுபற்றி அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தி இருக்கிருர்.

திரு. எம். எஸ். மணி : கலெக்டர் பி. ஏ. டெலிபோன் செய்தது போல அந்தக் குற்றவாளியேதான் கமிஷனருக்கு டெலிபோன் செய்தாரா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : Is it based on surmise or facts ? The hon. Member should take the responsibility to place the facts. He cannot surmise that this man is guilty or that man is guilty. Surmise should not be extended too much. This is not good.

பாடப் புத்தகங்கள் எழுத ஆசிரியர் தேர்வு முறை.

* 104 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தொடக்க நிலை வகுப்புகள் சிலவற்றிற்கான மொழிப்பாடப் புத்தகங்களை எழுதும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசு மேற்கொள்ளும் விதி முறைகள் யாவை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் வெளியிடும் பாடப் புத்தக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு விசேஷ அல்லது குறிப் பான விதிகள் எவையும் இல்லை. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட மொழிகளில் திறமையும் புலமையும் பெற்றிருக்க வேண்டும் ; பாடத் திட்டம் பற்றி நன்ருகத் தெரிந் திருக்க வேண்டும். பாடப் புத்தகங்களைப் பரிசிலித்தல், தேர்ந் தெடுத்தல், அங்கீகரித்தல் ஆகியவற்றில் அனுபவம், புத்தகங்கள் எழுதும் தகுதியும் பெற்றிருக்க வேண்டும். மேற்சொன்ன பொது வான விதிமுறைகளே பாடப் புத்தக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப் பதில் பின்பற்றப்படுகின்றன.